## கதையா, விதையா?

வாசிக்க: மத்தேயு 13:3-8, 18-23

***"வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கருத்தாய் இறைவார்த்தையை அறிவி" (2 தீமோ 4:2)***

இன்று எதிர்பார்த்த அளவு ஆத்தும அறுவடை இல்லாதது, அதற்கான காரணங்களை ஆராய நம்மைத் தூண்டுகிறது. அறுவடைக் குறைவிற்கு ஒரு முக்கிய காரணம் தரமற்ற விதை. விதையின் தரம் விளைச்சலின் அளவை நிர்ணயிக்கும். விதைக்கிறவனின் உவமையை விளக்குகையில் இயேசு, "விதையானது இறை வார்த்தை" என்றார் (லூக் 8:11) இன்றையப் பிரசங்கங்கள் பலவற்றில் நற்செய்தியின் சாராம்சம் குறைந்து, சுத்த சுவிசேஷத்திற்குப் பதிலாக கதைகளும் சொந்த அனுபவங்களுமே கூறப்படுகின்றன. எதிர்ப்பு நிறைந்த இடங்களில் நற்செய்தியறிவிக்கச் செல்லும்போது மிஷனரிகள் பயத்தினால் பலமிழக்கின்றனர். சிலவேளை, வரவேற்பில் மயங்கி, "இயேசு கிறிஸ்துதான் வழி" என்று சொல்லத் தைரியமின்றி இருப்போரும் உண்டு (கலா 1:9,10). கிறிஸ்தவரல்லாத உயர் அதிகாரிகள் பிரசங்க மேடைகளில் உடன் அமர்ந்திருக்கும்போதும் பேசத் துணிவின்றி இக்கட்டான நிலைக்குச் சிலர் தள்ளப்படுகின்றனர். நற்செய்தியைத் "தைரியமாய்ப்" பேச தனக்காய் வேண்டும்படி பவுல் போன்ற வீரரே மக்களைக் கேட்டுக்கொண்டனர்! (எபே 6:19,20).

அறுவடை குறைவாயிருப்பதற்கு விதை நேர்த்தியாக இருந்தால் மட்டும் போதாது, நிலத்தின் தன்மையும் முக்கியம். வழியருகேயுள்ள நிலம், கற்பாறையான நிலம், முள் நிறைந்த நிலம், முப்பது மடங்கு விளை நிலம், அறுபது மடங்கு விளை நிலம், நூறு மடங்கு விளைநிலம் என்று ஆறு வகை நிலங்களை ஆண்டவர் வரிசைப் படுத்தினார் (மத் 13:3-8). நமது நற்செய்திப்பணி முயற்சிகளில் நாம் சாதகச் சிந்தனையுடனிருப்பது அவசியமெனினும் நிலத்தின் தன்மைகளை மறந்துவிடக் கூடாது. எல்லா இடங்களிலும் ஒன்றுபோல் கனி கிடைக்காவிட்டால் சோர்ந்து போகக்கூடாது.

சபையானது பிந்திவிட்டது என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டும். ஒரு கிறிஸ்தவ மிஷனரியும் கால் வைக்குமுன் தொலைதூர இடங்களுக்கும் சாத்தானின் சேவகர்கள் ஏற்கனவே சென்றுவிட்டனர்.

ஏறக்குறைய முழுக் கிராமமும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டதால் அன்றைய மிஷனரிகளால் "நாசரேத்" எனப் பெயரிடப்பட்ட கிராமத்திலிருந்து நான் வருகிறேன். ஆனால் அதற்கடுத்த கிராமமாகிய ஆழ்வார் திருநகரி இன்றுவரை இந்துக்களின் ஆதிக்கத்திலேயே இருந்துவருகிறது. "கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளுக்குப் பிரகாசியாதபடி இவ்வுலகின் அதிபதி அவர்களுடைய மனதைக் குருடாக்கிவிட்டான்" என்ற பவுலின் வார்த்தைகளை நினைவிற்கொள்வோம் (2 கொரி 3:4). பணிக்களங்களிலுள்ள லீதியாள்களின் இருதயங்களை ஆண்டவர் "திறக்கும்படி" நாம் வேண்டவேண்டும் (அப் 16:14). நிலத்தின் தன்மைக்காய் ஜெபிக்கையில் நாம் உரிமைபாராட்ட பொருத்தமான திருவாக்கு சகரியா 4:7, "மாபெரும் மலையே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்குமுன் நீ சமபூமியாவாய்!"

*ஊரெல்லாம் செல்வேன், பறை சாற்றுவேன்,*
*உம் நாமம் உயர்த்திடுவேன்,*
*சாத்தான் கோட்டை தகர்த்திடுவேன்! — தந்தை S. J. பெர்க்மான்ஸ்*